ஒட்டப்பிடாரத்தை வட்டமாக மாற்றல்

*505 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒட்டப்பிடாரத்தை தாலுக்காவாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, அந்த தாலுக்கா ஆபீசுக்கு, தனியார் கட்டடம் அல்லாமல், சொந்தக் கட்டடம் கட்டிக் கொள்ள அரசு முடிவு செய்துள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அது பரிசீலனையில் இருக்கிறது.

உதவி கலெக்டர்கள்

*506 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1972-ம் ஆண்டில், தமிழ்நாடு அரசாங்க அலுவலர் தேர்வுக் கழகத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உதவி கலெக்டர்கள் எத்தனை நபர்கள் ?

(இ) தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை நபர்கள் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:

(அ) ஒன்பது.

(இ) தாழ்த்தப்பட்டோர் இரண்டு.

திரு. எம். முத்தையா: தலைவரவர்களே, இந்தத் தேர்வுக்கு மொத்தம் எத்தனை பேர் வந்திருக்கிறார்கள் அதில் பெண்கள் யாராவது வந்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பெண்களைப் பற்றி தற்போது விபரம் இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவர்களே, சிறுபான்மை வகுப்பினரைச் சேர்ந்த முஸ்லீம்கள் யாரேனும் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்களா ? இல்லை என்றால் சிறுபான்மையாக உள்ளவர்களுக்கும் வாய்ப்புத் தரவேண்டுமென்ற அடிப்படையில் தமிழ்நாடு அரசு தேர்வுக் கழகத்திற்கு உத்தரவு அனுப்பப்படுமா ? எதிர்காலத்திலேயாவது சிறுபான்மையினராக இருக்கின்ற முஸ்லீம்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தத் தேர்வு தகுதி அடிப்படையில் நடக்கிறது; மத அடிப்படையில் இல்லை. மைனாரிடிக்கு என்று தனி இடம் இல்லை. பாக்வர்டு கிளாஸ், ஷெடியூல்டு காஸ்ட்டுக்கு என்று தனி இடம் இருக்கிறது. இப்போது இருக்கின்ற சட்டப்படி முஸ்லீம்கள் பாக்வர்டு க்ளாசில் சேர்க்கப்பட்டிப்பதால் அவர்களும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

திரு. ந. சோமசுந்தரம்: தலைவரவர்களே, இந்த அரசு தாழ்த்தப்பட்ட பல பிரிவினருக்கு பல பதவிகளில் வாய்ப்பளிக்கிறது. அது வரவேற்கத்தக்கது. ஆனால் தமிழ்நாடு பூராவிலும் ஜனத் தொகை அதிகமாக உள்ள ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தினருக்கு இந்த உதவி கலெக்டர்கள் பதவி, இந்த தேர்வுக் கழகம் ஏற்பட்ட காலத்திலிருந்தே கிடைக்கவில்லை; ஒருவர் கூட தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அது பற்றி அரசுக்கு புகார் வந்திருக்கிறதா? அதில் அரசின் முடிவு என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: விபரம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, 9 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும், அதில் 2 பேர் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் என்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்த 9 பேர்களும் "கம்யூனல் ரொட்டேஷனில்" தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா? அப்படியானால், மொத்தமாக இதுவரையில் எந்தெந்த கம்யூனிட்டியிலிருந்து எத்தனை பேர் தேர்ந்தெருக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: கம்யூனல் ரொட்டேஷனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதரிக்கிறார்களா? அந்த முறை இப்போது இல்லை. ஓப்பன் காம்படிஷனில் இத்தனை பேர், பாக்வர்டு கிளாசில் இத்தனை பேர், ஷெடியூல்ட் காஸ்டில் இத்தனை பேர் என்றுதான் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அந்த வகையில் 1972-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட 9 பேர்களில், ஓப்பன் காம்படிஷனில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 5, பாக்வர்டு கிளாசிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 2, ஷெட்யூல்ட் காஸ்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 2. இப்படி 9 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வினா எண் 467; மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள்.

திரு. நா. வீராசாமி: சார், இது ரொம்ப முக்கியமான கேள்வி. நான் ஒரு துணைக் கேள்வி கேட்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

THIRU M. A. LATHEEF: Sir, this is a very important question. List of answers have not been supplied to us. I rarely put supplementaries. I have been raising my hands all the time but the Hon. Speaker has not called me. I am very sorry.

1974 மார்ச் 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணைக் கேள்விக்கு வாய்ப்பே கொடுக்க வில்லை என்று சொல்வது சரியல்ல. முன்னாலே கொடுத்திருக்கிறேன். எல்லாக் கேள்விகளுக்கும் எல்லோரும் துணைக் கேள்வி போட வேண்டு மென்று இல்லை.

திரு. எம். ஏ. லத்தீப் : மற்றவர்களைப் போல நான் துணைக் கேள்விகள் கேட்பது இல்லை. சில குறிப்பிட்ட கேள்விகளுக்கு மட்டும் தான் துணைக்கேள்வி கேட்கிறேன். அப்படி இருக்கும்போது இந்த முக்கியமான கேள்விக்கு துணைக் கேள்வி கேட்க எனக்கு இடமில்லை என்று ஏன் சொல்கிறீர்கள் ?

This is a very important question and you should give me an opportunity to put supplementaries. In spite of the fact that I have high regard for the Hon. Speaker, I am sorry to say that the Hon. Speaker has consistently not given me an opportunity to put supplementaries.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுக்கும் முன்னால் வாய்ப்பு கொடுத்திருக்கிறேன். அதைப்போலவே மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் வீராசாமி, சுரேந்திரன், ஏ. எம். இராஜா ஆகியோருக்கும் கொடுத்திருக்கிறேன். இந்த அவையில் 234 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எல்லாக் கேள்விகளுக்கும் எல்லோருக்கும் துணைக் கேள்வி போட வாய்ப்பளிக்க முடியாது. அந்த அளவுக்கு நமக்கு நேரம் போதாது.

THIRU M. A. LATHEEF : I am very sorry, Mr. Speaker, Sir.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்களுடைய குற்றச்சாட்டு முறை யானதல்ல.

THIRU M. A. LATHEEF : The Speaker must see that opportunity is given to those Members who put supplemetaries rarely. For that matter, I do not put supplementaries often. Only if I feel that the question affects general interest, then only I raise my hand, not for every question. I am very sorry Sir, I have not been allowed.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நமக்கு நேரம் போதவில்லை. அடுத்த கேள்வி—திருமதி அனந்தநாயகி—கேள்வி 467.

THIRU M. A. LATHEEF : Sir, I still insist, ; I request the Speaker to allow me a supplementary on this important question.

மாண்மிகு பேரவைத் தலைவர் : நாம் அடுத்த கேள்விக்குப் போய் ஆகிவிட்டது. திருமதி அனந்தநாயகி—மாண்புமிகு உணவு கூட்டுறவு அமைச்சர்.

THIRU M. A. LATHEEF : Sir, I record my protest and I record my deep sense of dissatisfaction, Sir.